# ஜீலை 2018

**எவரும் அழியாமல் நிலை வாழ்வைபெறும் பொருட்டு தன்னுடைய ஒரே மகனை அளிக்கும் அளவிற்கு இறைவன் இவ்வுலகின் மீது அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)**



நற்செய்திபரப்புதலின் செங்குத்தானதொடர்பைப் பற்றி இம்மாதம் நாம் தியானிப்போம். அதாவது எவ்வாறு கடவுளும் நற்செய்தி பரப்புதலும் ஒன்றோடு ஒன்று நெருக்கமான தொடர்புடையவை என்று சிந்திப்போம்.

நற்செய்தி பரப்புதலின் தொடக்கமும் சரியான உதாரணமும் எதுஎன்று கேட்டால் அது மூவொரு கடவுளும் அம்மூவொரு கடவுளில் இருக்கும் உயிரோட்டமும், அவர்களின் இடையே இருக்கும் பணி சார்ந்த ஒன்றிப்பும் தான். திருச்சபையின் மறைக்கல்வி போதனைகளை நாம் காணும் போது மூவொரு கடவுளிடத்தில் இருக்கின்ற அன்பும், ஒருங்கிணைவும் வழிந்தோடி தான் மனித இனத்தின் படைப்பாகவும் ,விடுதலையாகவும், புனிதப்படுத்தலாகவும் ் உருவானது. இன்னும் எளிமையாக சொல்ல வேண்டுமானால், மூவொரு கடவுளிடத்தில் இருக்கின்ற உயிரோட்டம் தான் மனித இனத்தின் உருவாக்கமாக வெளிப்படுகின்றது. .விழ்ச்சியடைந்த மனிதனின் மீட்பினைப் பெற்றுத் தந்த இறைமகன் மற்றும் தூய ஆவியானவரின் செயல்பாடுகளானது இன்றும் திருச்சபையின் மீட்பின் பணியிலே தொடர்கின்றது. (CCC 257,235)

இறைமகன் மனித உருவெடுத்தல் என்பது நற்செய்தி பரப்புவதின் மிக அழகான ஒரு எடுத்துக்காட்டு. புனிதபவுல் சிறப்பாக பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இவ்வாறு விளக்குகின்றார்: “கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும். கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக ் கொண்டிருக்க வேண்டியதொன்றாக கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். முனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவை சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.(பிலிப்பியர் 2:5-8). கிறிஸ்துவின் வெறுமையாக்கிக் கொள்ளுதல் என்னும் பண்பானது மனிதரின் மீட்பிற்கான இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட வழியாகும். பாவத்தைத் தவிர எல்லாவற்றிலும் கிறிஸ்து மனிதராக வாழ்ந்தார். தந்தைக்கும் தூய ஆவியானவருக்கும் நிகரான வல்லமையைப் பெற்றிருந்தாலும் மனிதராக பிறந்து நமக்கு வாழ்வளிப்பதை அவ்வல்லமை தடை செய்யவில்லை. மனித இனத்தை இறைவனோடு சேர்ப்பது என்பது கிறிஸ்துவோடு இணைந்தால் தான் நிறைவேறும். பிறப்பதற்கு தேர்ந்தெடுத்த மாட்டுத் தொழுவமாகட்டும், நாடோடியாய் சுற்றித் திரிந்து இறைவார்த்தையை போதிப்பதாகட்டும், எப்பொழுதுமே ஏழைகளுக்கும் தேவையில் இருப்பவர்களுக்கும் உடனிருப்பதாகட்டும் அல்லது மனித குலத்தின் மீட்பிற்காக உயிரையே சிலுவையில் தந்ததாக இருக்கட்டும், தன்னையே வெறுமையாக்கும் இச்செயலிலே கிறிஸ்து எடுத்த ஒவ்வொரு முடிவும் தான், தந்தை அவருக்கு கொடுத்த மீட்பின் பணியை நிறைவுறச் செய்தது. ஏன்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன். (யோவான் 6:38).

மேலறையிலே அஞ்சிநடுங்கிக் கொண்டு ஒளிந்து கொண்டிருந்த சீடர்களை மாற்றியது தந்தை மற்றும் மகன் அனுப்பிய தூய ஆவியானவர் தான்.(யோவான் 14:26). பெந்தகோஸ்தே பெருவிழாவில் தான் நற்செய்தி பரப்பும் பணியானது தெளிவையும் உறுதியையும் பெற்றது. திருத்தூதர்பணிகள் நூலானது எவ்வாறு தூய ஆவியானவர் பல்வேறு விதமான வடிவங்களில் தொடக்ககால திருச்சபையோடு இருந்தார் என்பதை தெளிவான ஒருவரலாறாக பதிவு செய்கின்றது. அதே தூய ஆவியானவர் தான் இன்றுவரை கத்தோலிக்கத் திருச்சபையை தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக தனக்கு கொடுக்கப் பட்டபணியை செய்வதன் மூலம் வழி நடத்தி வருகின்றார். “ஆவியானவரின் தூண்டுதலால் பெந்தகோஸ்தே திருவிழாவன்று இம்மறைபரப்பும் பணியானது தொடங்கப்பட்டது என்பது வெறும் சூழ்நிலையின் காரணமாக மட்டுமே தோன்றிய ஒன்று இல்லை. மாறாக தூய ஆவியானவர் தான் இந்த மறைபரப்பு நிகழ்வின் முதன்மையான காரணமானவர். அவர் தான் ஒவ்வொரு தனி நபரையும் நற்செய்தியை பறைசாற்ற அழைக்கின்றார். மேலும் அதே தூய ஆவியானவர் தான் நம்முடைய மனதின் ஆழத்தில் இறைவார்த்தையை நம்பி ஏற்றுக்கொள்ளவும் புரிந்துகொள்ளவும் தேவையான வரங்களைஅளிக்கின்றார். (Evangelii Nuntiandi #75)

தந்தைமகன் தூய ஆவியானவரால் திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவருமே மூவொரு கடவுளின் உள்ளார்ந்த வாழ்வு முறையிலும், பணியிலும் பங்கெடுக்க அழைக்கப்படுகின்றோம். என்னுடைய தனிப்பட்ட வாழ்விலும், பிறரோடு இணைந்து வாழ்கின்ற குழும வாழ்விலும், சமுதாயத்திலும் மூவொரு கடவுளின் அன்பையும், ஒற்றுமையையும் அனுபவிக்கின்றேனா? கிறிஸ்து தன்னையே வெறுமையாக்கி இவ்வுலகிலே மனிதராக பிறந்ததும், தூய ஆவியானவரின் செயல்பாடுகளும் என்னிலே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது?

**புனிதரின் கூற்று**: இவ்வுலகத்தை படைப்பதற்காக இறைவன் எதையும் இழக்கவில்லை ஆனால் அதை மீட்பதற்காக தன்னுடைய உயிரையும் இழக்க வேண்டியிருந்தது.

முக்திபேறுபெற்றபுல்டன் ஜெ ஷீன்

**வாழ்வாக்க:**

வாழ்க்கையின் ஓவ்வொரு நிகழ்விலும், கடவுளின் அன்பு எவ்வாறு நம்முடைய மீட்பின் அனுபவத்தை ஆழமாக இட்டுச் செல்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக வாழ முயலுவோம்.